இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 03.01.2026

நிதியை நீதியுடன் நிலைநிறுத்திய முதல்வர்!

தமிழ்நாட்டின் நிதி நிர்வாகம் குறித்த தவறான பிம்பத்தைச் சிலர் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள். நிதியை வெறும் எண்ணிக்கையாக அல்ல, எண்ணமாகப் பார்க்க வேண்டும். அத்தகைய நீதியை நிதி நிர்வாகத்தில் உருவாக்கினார் முதலமைச்சர் அவர்கள்.

ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனேயே இரண்டு முக்கியமான தடைகள் தமக்கு உள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். முந்தைய பத்தாண்டு காலமாக தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் சீரழித்த அ.தி.மு.க. ஆட்சி என்பது ஒன்று. தமிழ்நாட்டின் வளர்ச்சியை அனைத்து வகையிலும் தடுக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றொன்று என்பதை மாண்புமிகு முதலமைச்சர் சுட்டிக் காட்டினார்கள்.

இந்த இரண்டு தடைகளுக்கும் தீர்வு கண்டு, தமிழ்நாட்டை மீட்பது மட்டுமல்ல, வளர்க்கவும் வேண்டிய கடமையும் பொறுப்பும் முதலமைச்சருக்கு இருந்தது.

பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியின் சீரழிவுகளைச் சரி செய்து, ஒன்றிய பா.ஜ.க. அரசின் தடைகளையும் வென்று இன்று தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் மாண்புமிகு முதலமைச்சர் வளர்த்தெடுத்துள்ளார்.

1. **தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.19 விழுக்காடு என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. தி.மு.க. ஆட்சிக்கு வரும்போது 2021 ஆம் ஆண்டில் 7.89 விழுக்காடாக இருந்தது. தற்போது தமிழ்நாடு 11.19 விழுக்காடாக உயர்ந்து விட்டது. 14 ஆண்டு களுக்குப்பின், மீண்டும் இரட்டை இலக்க வளர்ச்சியைத் தமிழ்நாடு எட்டி இருக்கிறது.**
2. இந்திய நாட்டின் வளர்ச்சியில் நூறில் பத்து விழுக்காடு பங்கை தமிழ்நாடு செலுத்தி வருகிறது.
3. கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் 10 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. தொழில் நிறுவனங்கள் முழுமையாக தனது பணியைத் தொடங்கும் போது 35 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.
4. இந்தியாவிலேயே அதிகத் தொழிற்சாலைகள் உள்ள மாநிலமாக, அதிகத் தொழிற்சாலைப் பணியாளர்கள் உள்ள மாநிலமாக, அதுவும் பெண் பணியாளர் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது.
5. நிதிப் பற்றாக்குறை திறம்படக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வருவாய் பற்றாக்குறை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
6. மாநில உள்நாட்டு உற்பத்தியில் கடனின் விகிதம் குறையும் போக்கில் உள்ளது. ஒன்றிய நிதிக்குழு பரிந்துரைத்த அளவான 28.7 விழுக்காட்டில் இது 2.63 விழுக்காடு குறைவே ஆகும். கடனுக்கு மிக முக்கியமான காரணம், ஒன்றிய அரசின் நடவடிக்கைகள்தான். மாநிலத்துக்குத் தர வேண்டிய நிதியையும் தருவது இல்லை. ஒன்றிய அரசின் திட்டங்களையும் மாநில அரசின் நிதியில் தான் செய்யவேண்டி உள்ளது. மேலும் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் விட்டுச் சென்ற கடனுக்கு வட்டியாக மட்டும் ரூபாய் 1.40 லட்சம் கோடியை இன்றைய அரசு கொடுக்க வேண்டி உள்ளது.
7. நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் முன் 31.1.2025 அன்று 2024-25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை முன்வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் இந்தியாவின் தோல்பொருட்கள் மற்றும் காலணிகள் உற்பத்தியில் 38% பங்களிப்பும் இந்தியாவின் மொத்த தோல்பொருள்கள் ஏற்றுமதியில் 47% பங்களிப்பையும் தமிழ்நாடு வழங்கியுள்ளது என்றும், தோல் பொருட்கள் உற்பத்தித் துறையில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கி யுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் முதலீட்டாளர்களின் தேவைக்கு ஏற்ப வழங்கப்படும் ஊக்கத் தொகை முறை, மூலதன மானியங்கள், ஊதிய மானியங்கள் மற்றும் நில விலைமானியங்கள் போன்றவற்றை தமிழ்நாடு அரசு சிறப்பாக வழங்கி வருகிறது என்றும் தெரிவித்துள்ளது.
8. மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள், ஜவுளி மற்றும் ஆடைகள், மின்னணுவியல் ஆகிய பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக விளங்குகிறது.
9. **நிதி ஆயோக் வெளியிட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான குறியீட்டில் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது. சமூக முன்னேற்றக் குறியீடுகளில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. குறைந்த வறுமை நிலைகளில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவின் வறுமை நிலை என்பது 11.28 விழுக்காடாக உள்ளது. ஆனால் தமிழ்நாட்டின் வறுமை நிலை என்பது 1.43 ஆக குறைந்துவிட்டது. அதாவது குறைக்கப்பட்டு விட்டது.**
10. பணவீக்கம் குறைந்துவரும் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. 20 முக்கிய இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு 8ஆம் இடத்தில் - குறைந்த சில்லறை வர்த்தகப் பணவீக்கத்தைக் கொண்டுள்ள மாநிலமாக இருக்கிறது.
11. **அனைத்து நிதியும் வளர்ச்சித் திட்டங்களுக்கு செலவு செய்யப்படுகிறது. மகளிர் உரிமைத் தொகை, கட்டணமில்லா பேருந்து பயணம் ஆகியவை பெண்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அடித்தளமாக இருக்கிறது. நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் ஆகிய திட்டங்கள் கல்வி முன்னேற்றத்தை உறுதி செய்துள்ளது. உடலினை உறுதி செய், காலை உணவு ஆகிய இரண்டும் பள்ளிக் குழந்தைகளின் நலத்தை அடிப்படையாகக் கொண்டவை. உள்கட்டமைப்பு வசதிக்காகச் செலவு செய்யப்பட்டவை அனைத்தும் வளர்ந்து வரும் மாநிலத்தின் தேவையை பூர்த்தி செய்கின்றன. வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கோரப்படும் கடனானது மூலதனச் செலவுகளுக்குச் செய்ய வேண்டும். அதனைத் தான் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது. கொடுத்த வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டுள்ளதை வைத்து நிதி நிர்வாகத்தை அளவிட வேண்டும்.**

இப்படி நிதியை நீதியுடன் வழங்கும் மாநிலம் எங்கும் இல்லை.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.1.2026) மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் தலைமையில் நடைபெறும் சமத்துவ நடைப்பயணத் தொடக்க விழாவில் கலந்து கொள்வதற்காக திருச்சிராப்பள்ளிக்கு வருகை தந்த போது, பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

திராவிட மாடல் அரசு சார்பில் – சுதந்திரப் போராட்ட வீராங்கனை

வீரமங்கை இராணி வேலுநாச்சியார் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை!

அமைச்சர் பெருமக்கள் செலுத்துகிறார்கள்!

சென்னை, ஜன.3– தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு சார்பில் சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் பிறந்த நாளான இன்று (3.1.2026) சென்னை காந்தி மண்டப வளாகம் மற்றும் சிவகங்கை சூரக்குளத்தில் அமைச்சர் பெருமக்கள் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், இன்று (3.1.2026) காலை 9.30 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அம்மையாரது திருவுருவச் சிலைக்கும், காலை 10.00 மணியளவில் சிவகங்கை மாவட்டம் சூரக்குளத்தில் அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு மண்டபத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மன்னர் செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதி - முத்தாத்தாள் நாச்சியார் தம்பதியரின் மகளாக 1730-ஆம் ஆண்டு பிறந்த வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்கள், சிறுவயதிலே வாள்வீச்சு, அம்பு விடுதல், ஈட்டி எறிதல், குதிரையேற்றம் போன்ற பல்வேறு போர்க்கலைகளைக் கற்றுத் தேர்ந்தார். 1746-ஆம் ஆண்டு சிவகங்கை மன்னர் முத்துவடுக நாதரை மணந்து, சிவகங்கை சமஸ்தானத்தின் இராணியானார். 1772-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் சிவகங்கையின் மீது போர் தொடுத்த போது, மன்னர் முத்துவடுகநாதர் கடுமையாகப் போர் புரிந்தபோதும் சூழ்ச்சி காரணமாக வீர மரணமடைந்தார்.

பின்னர், வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்கள், மைசூர் மன்னர் ஹைதர் அலி, திப்பு சுல்தான் மற்றும் அக்காலத்தில் திண்டுக்கல் பகுதியை ஆண்ட கோபால் நாயக்கர் ஆகியோர் உதவியுடன் ஆங்கிலேயர்களுடன் போரிட்டு வென்று சிவகங்கை சீமையை 1780ஆம் ஆண்டு மீட்டார்.

அதன்பின், 16 ஆண்டுகள் சிவகங்கைச் சீமையைச் சிறப்பாக 2ஆட்சி செய்தார். ஆங்கிலேயர்களை எதிர்த்த "முதல் இந்திய விடுதலைப் பெண் போராளி" வீரமங்கை வேலுநாச்சியார் அவர்கள் 25.12.1976 அன்று மறைந்து அழியாப் புகழ் பெற்றார்.

தமிழ் மண்ணின் தலைசிறந்த வீராங்கனை இராணி வேலுநாச்சியார் அவர்களின் வீரத்தினை வருங்காலத் தலைமுறையினர் அறிந்து போற்றிடும் வகையில், 2024 - 2025ஆம் ஆண்டு செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது, ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச்சிலை நிறுவப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, நிறுவப்பட்டுள்ள வீரமங்கை வேலுநாச்சியார் திருவுருவச் சிலை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.9.2025 அன்று திறந்து வைத்தார்கள்.

சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் அம்மையாரது பிறந்த நாளான இன்று (ஜனவரி 3ஆம் நாள்), அமைச்சர் பெருமக்கள், சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அவர்களது திருவுருவச் சிலைக்கும், சிவகங்கை மாவட்டம் சூரக்குளத்தில் அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு மண்டபத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்துகின்றனர்.

இந்நிகழ்ச்சியில், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி சிறப்புரை!

பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

இ.கருணாநிதி எம்.எல்.ஏ. – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – மேயர் க.வசந்தகுமாரி – துணை மேயர் கோ.காமராஜ் – அ.தமிழ்மாறன் பங்கேற்பு! த.ஜெயகுமார் நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை, ஜன.3- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா இன்று (03.01.2026, சனிக் கிழமை) மாலை 6.00 மணிக்குகுரோம்பேட்டை, திருநீர்மலை, நாகப்பா நகரில் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் விளையாட்டு உபரகணங்கள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. (தாம்பரம் மாநகர செயலாளர்) தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பம்மல் மண்டல குழுத்தலைவர், வே.கருணாநிதி, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், தாம்பரம் மாநகர துணைச் செயலாளர் இரா.நரேஷ்கண்ணா, பகுதி கழக நிர்வாகிகள் கே.சந்திரன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, தாம்பரம் மாநகர பிரதிநிதிகள் சி.பார்த்தசாரதி இரா.குமரேசன், க.சுந்தரமூர்த்தி, இரா.பாபுஜி, வட்டக்கழக செயலாளர் ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்கும்மரன், ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம்.ஜோசப் மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சண்முகசுந்தரி ஜெயகுமார், சித்ராதேவி முரளிதரன், பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஞா.பிரபு, தாம்பரம் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.முரளிதரன், ஆ.செந்தில்குமார், சி.பி.வினோத்குமார், உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

பகுதி மாணவரணி அமைப்பாளர் பி.கார்த்திக் நன்றியுரை ஆற்றுவார்.

பகுதி செயலாளர் த.ஜெயகுமார் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்துள்ளார்.

மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு, சுற்றுலாத்துறையால் நடத்தப்படும் இந்திய நாட்டிய திருவிழாவில் இரண்டாவது கலை நிகழ்ச்சியாக திருச்சியைச் சேர்ந்த குடக்குத்து கலையகம் குழுவின் கிராமிய கலை நிகழ்ச்சி நடைபெற்றது.